DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.
**அமர்வு வழக்கு எண்.138/2013**

Deposition of :PW -25

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.ஆண்டாள் | Caste: |
| Husband Name: | திரு. பழனிவேல் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 22nd day of January -2024.

**A1 , A2, A5 to A9, A13 to A18 present. A11 called absent. Petition u.sec.317 Cr.P.C filed and allowed. A3 produced.**

**22.01.2024**

**முதல் விசாரணை**

நான் வங்குடியில் காளியம்மன் கோவில் அருகில் குடியிருக்கிறேன். இறந்துபோன காசிநாதன், தர்மலிங்கம், மகாலிங்கம், பிரபு, சுரேஷ் ஆகியோரை தெரியும். இறந்துபோன பிரபு எனது கொழுந்தனார் பாரியின் மகன். சாட்சி அருகில் சென்று எதிரிகளை பார்த்துவிட்டு எதிரி பழனிசாமியை காண்பித்து அவர் பிரபுவின் தலையை பந்தடித்துகொண்டு வந்ததாக சத்தம்போடுகிறார். எதிரிகளை பார்த்துவிட்டு மீண்டும் சாட்சி கூண்டிற்கு வந்த சாட்சி கீழே விழுந்துவிட்டார். பதற்றப்படுகிறார். எனவே அவர் இருக்கை கொடுத்து அமரவைக்கப்பட்டார்.

பிரபு, ராஜலிங்கம், தர்மலிங்கம் ஆகியோர் குளிக்க சென்றார்கள். நான் வீட்டிலிருந்தேன். அன்று வெள்ளிக்கிழமை காலை நேரம். அப்போது ஊர் மக்கள் வெட்டிவிட்டார்கள் வெட்டிவிட்டார்கள் என்று சத்தம்போட்டுகொண்டே ஓடினார்கள்.

நானும் ஓடினேன். அப்போது எதிரிகள் பழனிசாமி, பிரபாகரன், சுரேஷ் ஆகியோர் பிரபுவின் தலையை பந்தடித்துக்கொண்டு வந்தார்கள். அதாவது காலால் உதைத்துகொண்டு வந்தார்கள். காசிநாதனின் மூத்த மகன் சங்கர் என்பவரது தலையை சூலத்தில் குத்தினார்கள். சங்கருக்கு வேறொரு பெயர் இருக்கிறது. அந்த பெயர் எனக்கு தெரியவில்லை.

பிரபுவின் தலையை காளியம்மன் கோவிலின் பின்புறம் போட்டார்கள். மேற்படி எதிரிகள் மூவரும் தான் போட்டிருப்பார்கள். நான் ரோட்டில் பார்த்துகொண்டே போனபோது காசிநாதன் வெட்டப்பட்டு கிடந்தார். ஜானகியும் வெட்டப்பட்டு கிடந்தார். சங்கரும் வெட்டப்பட்டு கிடந்தார். அவர்களை யார் வெட்டினார்கள் என்று நான் பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1, 2, 5, 7, 9, 11, 14 முதல் 18 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தேசிங்குபாலன் இறந்துபோன சமயத்திலிருந்து எங்கள் ஊரில் போலிசார் இருந்தார்கள் என்றால் சரிதான். அன்று காலை 8.00 மணியளவில் காயமடைந்திருந்த ஜானகியை போலிசார் மருத்துவமனைக்கு கொண்டுபோய்விட்டார்கள் என்றால் சரிதான். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். நான் முன்னர் கூலிவேலை செய்தேன் என்றும் பிரபு இறந்ததை பார்த்திற்கு பிறகு வேலைக்கு போகவில்லை என்று சாட்சி சுயமாக சொல்லுகிறார். மயக்கம் வருவதால் வேலைக்கு போவதில்லை என்று சாட்சி சுயமாக கூறுகிறார்.

நான் மேலத்தெருவில் காளியம்மன் கோவில் அருகில் வசிக்கிறேன். எங்கள் ஊரில் கிழக்கு தெரு, காலனிதெரு, வடக்கு தெரு, தெற்குதெரு என்ற தெருக்கள் உள்ளது. சம்பவத்தினத்தன்று போலிசார் என்னை விசாரித்தபோது காலை சுமார் 10.00 மணி இருக்குமா என்றால் தான் படிக்காத நபர் என்றும், தனக்கு நேரம் சரியாக தெரியாது என்றும் சொன்ன சாட்சி நேரம் காலை 10.00 மணி இருக்கலாம் என்று சொல்லுகிறார்.

வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காவல்தான் இருந்தார்கள் என்று சாட்சி சுயமாக கூறுகிறார். நான்

முதல்விசாரணையில் சொன்ன சங்கதிகளை இன்று தான் முதல்முறையாக நீதிமன்றத்தில் சொல்லுகிறேன் என்றால் சரிதான்.

**3, 8–ஆம் எதிரிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.**

**6–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

**13–ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இதற்கு முன்பாக இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக வேறுறொரு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த நீதிமன்றத்தில் நான் அளித்த சாட்சியத்தில் "இளவர்கள் 1 , 2 ஆகியோர்களும் மற்றும் வயதுவந்த எதிரிகளும் சேர்ந்து எனது கொழுந்தனார் மகன் பிரபுவை தலையை வெட்டி தலையை பந்து விளையாடிகொண்டிருந்தார்கள்" என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். மேலும் நான் அந்த நீதிமன்றத்தில் "கத்தியால் இளவர் பிரபாகரன் கழுத்தை வெட்டினார் மற்றொரு இளவரும் கத்தியால் வெட்டினார் "என்று சொல்லியிருக்கிறேனா என்றால் அது பற்றி தற்போது எனக்கு நினைவில்லை. தான் கழுத்தை வெட்டியதை நேரில் பார்க்கவில்லை என்றும் தலையை பந்துவிளையாடிகொண்டிருந்ததை தான் நான் பார்த்ததாகவும் சாட்சி சுயமாக சொல்லுகிறார்.

சம்பவம் குறித்து எனக்கு நேரில் எதுவும் தெரியாது என்றாலும், போலிசார் சொல்லிகொடுத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. மனசாட்சிபடி சாட்சி சொல்வதாக சாட்சி சுயமாக கூறுகிறார்.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.